<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>

**<u>S.C. 32/2023</u>**

பெயர் :–வேம்பு (P.W.–1)
த/பெ. :–வைத்தியநாதன்.
தேதி :– 20.11.2025.
Crl.M.P. 23/2025 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சிகள் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:––</u>**

நீங்கள் காவல் நிலையத்திற்கு சென்றீர்களா என்றால் நான் காவல் நிலையம் செல்லவில்லை. அடிப்பட்ட அன்று இரவே மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். மறுநாள் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. மறுநாள் வந்து போலீசார் விசாரணை செய்தார்கள். ஆஜர் எதிரிகள் நால்வரையும் எனக்கு தெரியும் அவர்களது அப்பா பெயர் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் நான் புகார் வாக்குமூலம் அளிக்கும்போது எதிரிகள் நான்கு பெயரின் தந்தை பெயரை நான் எப்படி கூறினேன் என்றால் தெருவில் இருபவர்களுக்கு தெரியும் அவர்களிடம் கேட்டு கூறினேன். மருத்துவமனையிலிருந்து தெருவிற்கு சென்று எதிரிகளின் அப்பா பெயரை கேட்டு வாக்குமூலத்தில் கூறினேனா என்றால் இல்லை. என்னுடன் மருத்துவமனைக்கு அழைத்து வந்தவர்களிடம் கேட்டு கூறினேன். என்னுடன் மருத்துவமனைக்கு பிரகாஷ் என்பவர் வந்தார் அவர்தான் காரில் அழைத்து வந்தார். அங்கு மருத்துவமனையில் நிறைய நபர்கள் இருந்தார்கள். அவர்கள் கூற கூற அவர்கள் தந்தை பெயரை நான் கூறிவிட்டேன் யார் யார் கூறினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. என்னுடைய புகார் வாக்குமூலம் எத்தனை பக்கம் கூறினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. புகார் வாக்குமூலத்தைபோலீசார் தான் எழுதினார்கள். நான் எல்லா பக்கத்திலும் கையொப்பம் போட்டீர்களா என்றால் எல்லா பக்கத்திலும் கையொப்பம் செய்தேனா அல்லது கடைசி பக்கத்தில் மட்டும் கையொப்பம் இட்டேனா என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எதிரிகள் என்னை வீட்டிற்குள் அடித்தார்களா அல்லது வீட்டிற்கு வெளியே அடித்தார்களா என்றால் வீட்டின் வாசல் கதவை திறந்தவுடன் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் அடித்தார்கள். வீட்டின் வெளியே மகாலிங்கம், ராஜ்குமார் அடித்தார்கள் வீட்டின் உள்ளே விக்னேஷ்,

ஹரிஹரன் வீட்டின் உள்ளே வந்து அடித்தார்கள். வீட்டிற்கு வெளியே என்றால் ரோடா என்றால் ரோடு இல்லை. காம்பவுண்ட் சுவற்றிற்கு உள்ளே அடித்தார்கள். ரோட்டில் இருந்து அடிக்கவில்லை என்றால் சரிதான்.

ரோட்டிற்கும் காம்பவுண்ட்டுக்கும் எவ்வளவு தூரம் என்றால் ரோட்டிலேயே தான் காம்பவுண்ட் சுவர் இருக்கும். காம்பவுண்ட்டுக்கும் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் ஒரு இருசக்கர வாகனன் நிற்கும் அளவிற்கு இடம் இருக்கும். காம்பவுண்ட்டுக்கும் வீட்டிற்கும் இடையே எவ்வளவு பேர் நிற்கலாம் என்றால் 4 மற்றும் 6 பேர் நிற்கலாம். புகார் வாக்குமூலத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்று கூறியுள்ளீர்கள் என்றால் 4, 5 பேர் வந்தார்கள் என்று கூறியுள்ளேன். புகாரில் 4 பேர் மற்றும் பேர் தெரியாத சிலர் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் 4 பேரும் மற்றும் சிலர் என்று குறிப்பிட்டுள்ளதில் அந்த சிலர் என்பவரின் பெயர் எனக்கு தெரியவில்லை. அந்த நபர்களும் வீட்டிற்குள் வந்தார்கள். வீட்டிற்குள் வந்தபோது எங்கு இருந்தீர்கள் என்றால் நானும் வீட்டிற்குள் இருந்தேன். என்னை கொலை செய்யும் அளவிற்கும் எதிரிகளுக்கு என்ன முன்விரோதம் உள்ளது என்றால் குப்பை கொட்டுவது சம்பந்தமாக வந்த பிரச்சனை தான் காரணம். இதுசம்பந்தமாக வந்த பிரச்சனை தவிர வேறு பிரச்சனை இல்லை. யார் குப்பையை யார் கொட்டினார்கள் என்ற விபரம் புகார் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். கொலை செய்யும் அளவிற்கு நான் கொடுத்த புகார் வாக்குமூலத்திலேயே, நான் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திலேயே குப்பை கொட்டுவது சம்பந்தமாக எந்தவித முன்விரோதம் உள்ளதாக கூறப்படவில்லை என்றால் நான் இதற்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்தபோது குப்பை கொட்டுவது சம்பந்தமாக என்று சாட்சியம் கூறியுள்ளேன்.

நான் மருத்துவமனையிலிருந்து புகார் வாக்குமூலம்அ ளிக்கும்போது இதுப்பற்றி சொல்லவில்லை என்றால் நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசாரிடம் குப்பை கொட்டுவது சம்பந்தமாக பிரச்சனை என்று தான் கூறினேன். அவர்கள் எழுதினார்களா என்று எனக்கு தெரியவில்லை. குப்பை கொட்டுவது சம்பந்தமாக எனக்கு எதிரிகளுக்கும் இருக்கும் பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையதத்தில் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் சுமார் 1 ஆண்டுக்கு முன் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததற்கு ரசீது உள்ளதா என்று சொன்னால் நான்கொடுத்த புகாரின் அடிப்படையில் FIR போட்டுள்ளார்கள் அதன் நகல் நான்

வைத்துள்ளேன். அந்த நகலை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் அந்த விபரம் நான் சொன்னேன் அவர்கள் அதை எழுதவில்லை. இந்த FIR குறித்து போலீசாரிடம் சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலத்தில் எழுதவில்லை. ரோட்டிலிருந்து 1ம் எதிரியின் அப்பா பாலகிருஷ்ணன் வீடு எதிர் புறம் சுமார் 40 அடி துாரம் இருக்குமா என்றால் எவ்வளவு துாரம் என்று எனக்கு தெரியாது. ரோட்டின் எதிர்புறம் உள்ளது. அவரின் வீடு ரோட்டின் ஓரத்தில் உள்ளதா ரோட்டின் உள்ளடக்கமாக உள்ளதா என்றால் ரோட்டிலிருந்து கொஞ்சம் உள்ளடக்கமாக இருக்கும் ஆனால் குப்பையை காம்பவுண்ட் சுவருக்கு வெளியே ரோட்டில் தான் கொட்டுவர்கள். அவர்கள் வீட்டின் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே தான் கொட்டுவார்களா என்றால் இல்லை எங்கள் வீட்டிற்கு வெளியே காம்பவுண்ட் வெளியே எங்கள் வீட்டிற்கு எதிரே ரோட்டில் கொட்டுவார்கள். மேற்கூறிய விபரங்கள் அனைத்தும் நான் புகார் வாக்குமூலம் அளிக்கும்போது கூறினேனா என்றால் கூறினேன். அந்த ரோடு பேருந்து சென்றுவரும் ரோடு என்றால் சரிதான். மேற்படி சம்பவம் இதுபோல் நடக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனக்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள் என்றாலும்சரியல்ல, சம்பவம் நடந்தது உண்மை. நான் கொடுத்த புகாரே பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. நான் Collector அலுவலகத்தில வேலை செய்து வருகிறேனா என்றால் நான் தற்போது Collector அலுவலகத்தில வேலை செய்கிறேன். சம்பவ சமயத்தில யூனியன் அலுவலகத்தில் வேலை செய்தேன். போலீசாரிடம் நான் Collectorஅ்லுவலகத்தில வேலை செய்வதாக கூறினேனா என்றால் நான் சம்பவ சமயம் யூனியன் அலுவலகத்தில வேலை செய்வதாக தான் கூறினேன். நான் கூறுவது பொய் என்றாலும் நான் Collector அலுவலகத்தில் வேலை செய்வதாக கூறி செல்வாக்கின் அடிப்படையில் போலீசாரிடம் கூறினேனா என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை உதவி அமர்வு நீதிபதி.</u>
<u>**S.C. 32/2023**</u>

பெயர் :– சுபாஷிணி (P.W.–3)

த/பெ. :– வைத்தியநாதன்

தேதி :– 20.11.2025.

Crl.M.P. 23/2025 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சிகள் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

<u>**1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

என்னை எதிரிகள் வீட்டிற்குள் வந்து அடித்தார்களா அல்லது வெளியில் வந்து அடித்தார்களா என்றால் வாசலில் அடித்தார்கள். யார் அடித்தார் எதனால் அடித்தார் என்றால் முதலில் மகாலிங்கம் என்பவர் என்னை ராடால் எனது தலையிலும் எனது காலிலும் அடித்து நான் காலில் மூன்று மாதம் மாவு கட்டு போட்டிருந்தேன். உள்ளே வந்த எதிரிகள் என்னை தான் அடித்தார்களா என்றால் என்னை தான் முதலில் மகாலிங்கம் அடித்தார். மாவு கட்டு எங்கே போட்டீர்கள் என்றால் நான் பிரைவேட் மருத்துவமனையில் மாவு கட்டு மட்டும் தான்வந்து போட்டேன் எனக்கு தலையில் தையல் போட்டது எல்லாம் அரசு மருத்துவமனயில் தான். குழந்தைகளை விட்டுவிட்டு வந்ததால் மாவு கட்டு மட்டும் தனியார் மருத்துவமனையில் போட்டேன். எனக்கு மாவு கட்டு நான் போட்டதற்காக எனக்கு அரசாங்க மருத்துவமனையில் எக்ஸ் ரே எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். எக்ஸ்ரே எடுத்தார்கள் குழந்தைகள் இருப்பதால் அன்றைய தினமே போடவில்லை மறுநாள் தனியார் மருத்துவமனைக்கு சென்று மாவு கட்டு போட்டுக்கொண்டேன். நான் திருவாரூர் மருத்துவமனக்கு செல்லவில்லையா என்றால் நான் போகவில்லை.

என்னை வீட்டிற்குள் என்னை அடிக்கும்போது எதிரிகள் எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் வீட்டில் நான் எனது அப்பா, அம்மா, எனது தங்கை இருந்தோம். எதிரிகள் 4 பேர் வீட்டினுள் வந்தார்கள். அந்த வீட்டில் எதிரிகள் 4 பேரும் நாங்கள் 4 பேரும் இருந்தோம் என்றால் சரிதான். எதிரிகள் 4 பேரும் அடித்தார்கள் நாங்கள் நான்கு பேர் இருந்தோம் அப்போது எதிரிகளை நாங்கள் திருப்பி அடிக்கவில்லையா என்றால் எதிரிகள் நான்குபேரும் அடித்ததை நாங்கள் நான்குபேரும் வாங்கிக்கொண்டிருந்தோம்.

திருப்பி அவர்களை நாங்கள் அடிக்கவில்லை. எதிரிகள் நான்கு பெயர்களையும் தெரியுமா என்றால் எதிரிகள் பெயர்கள் தெரியும், மகாலிங்கத்தின் அப்பா பெயர் ெ தரியும், மற்றவர்களின் அப்பாவின் பெயர் எனக்கு தெரியாது,. அவர்கள் தெருவில் இருக்கிறார்கள். எதிரிகள் அடித்த போது மணி என்ன இருக்கும் என்றால் மாலை 4.30 மணி ஆகும். எனக்கு தலையில் அடிப்பட்டது சம்பந்தமாக எக்ஸ்ரே எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. எனக்கு மருத்துவமனைக்கு எப்போது சென்றீர்கள் என்றால் எனக்கு நினைவு இல்லாததால் எனக்கு மணி தெரியாது. முதலில் அடித்தது உங்களையா என்றால் ஆமாம். அடித்த உடனே மயங்கி விழுந்துவிட்டேனா என்றால் இல்லை. அரை மணி நேரம் கழித்து மயக்கம் அடைந்தேன். என்னை யாரும் அடிக்கவில்லை என்றாலும் நான் கற்பணையாக அடித்தார்கள் என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்களா என்றால் மறுநாள் வந்து விசாரணை செய்தார்கள். மருத்துவமனையில் விசாரித்தார்களா என்றால் மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை அமர்வு நீதிபதி,
மயிலாடுதுறை.